# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 62 — 1973 ජූනි 01 වැනි සිකුරාදා — 1973.06.01**

62 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு யூன் மாதம் 01 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் |
|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 231 |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — |
| துணை விதிகள் .. .. .. | 232 |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. ... | — |
| வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| வரவு செலவுத் திரட்டுகள் .. .. .. | — |
| ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. .. | — |
| நாநாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


கவனிக்க.—இலங்கைப் பழச் சபை சட்டமூலம் 1973 ஆம் ஆண்டு மே மாதம் 18 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### மட்டக்களப்பு மாநகரசபை

மட்டக்களப்பு தண்ணீர் வேலைகள் கட்டளைச் சட்டம்

மட்டக்களப்புப் பட்டினத்தின் எல்லைகளுக்குள்ளிருக்கும் வீடுகள், கட்டடங்கள் காணிகள், கூலி மனைகள் ஆகிய சகலவற்றினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஆறு வீதமான ஒரு தண்ணீர் வரியை 1973 ம் ஆண்டுக்கு மட்டக்களப்பு மாநகரசபை (209 ம் அத்தியாயமான) மட்டக்களப்பு தண்ணீர் வேலைகள் கட்டளைச் சட்டத்தின் 4 (1) ம் பிரிவின் கீழ் விதித்திருக்கிறதென்றும் அவ்வரி முறையே யூன் 30, செத்தெம்பர் 30, திசம்பர் 31 ஆகிய திகதிகளிலன்று அல்லது அதற்கு முன்பு மூன்று தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படல் வேண்டுமென்றும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பீ. சிரிவர்த்தன,
செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மார்ச் மீ 13 ந் உ.

6–138—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

### அவிசாவலை நகரசபை

வாடி வீடுகள் சட்டம்

(275 ம் அத்தியாயமான) வாடிவீடுகள் சட்டத்தின் 4 ம் பிரிவின் கீழ் அவிசாவெலையிலுள்ள வாடி வீடு சம்பந்தமாக அதற்கான ஏற்ற அதிகாரசபையான அவிசாவெலை நகரசபையினால் ஆக்கப்பட்டு, அப்பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு அரசாங்க நிருவாகம், உளளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட விதி.

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி,
உல்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 4 ந் உ.

#### விதி

அவிசாவெலை வாடி வீடு சம்பந்தமாக அவிசாவெலை நகர சபையினால் ஆக்கப்பட்டவையும் 1966 சனவரி 27 ந் தேதிய 14,648 ம் இலக்கக் கசற்றில் பிரசுரிக்கப்பட்டவையுமான விதிகள், இத்தால் வருமாறு திருத்தஞ் செய்யப்படுகின்றன :

(1) அதன் கண்ணுள்ள அட்டவணைக்குப் பதிலாக, இதன் கண்ணுள்ள அட்டவணையை இடுவதன் மூலம்

##### அட்டவணை

தங்குவதற்கான கட்டணங்கள்

| | ரூ. சதம் |
|---|---|
| (1) (படுக்கையறையல்லாத) வாடிவீட்டின் எப்பாகத்திலேனும் தங்கியிருப்பதற்கு, ஒவ்வொரு ஆளுக்கும் | |
| (அ) 1 மணித்தியாலத்திற்கு மேற்படாத காலப்பகுதிக்கு— | |
| (i) வாடி வீட்டில் பிற்பகல் தேனீர் மாத்திரம் பருகுமிடத்து .. .. .. | 0 25 |

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

**எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.**

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.**

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.**

ரூ. ச.

(ii) வாடிவீட்டில் (பிற்பகல் தேனீர் தவிர்ந்த) உணவொன்று உட்கொள்ளப்படுமிடத்து .. 0 50

(ஆ) 1 மணித்தியாலத்திற்கு மேற்பட்ட ஆனால் இரண்டு மணித்தியாலங்களுக்கு மேற்படாத ஏக காலப்பகுதிக்கு—

(i) வாடி வீட்டில் பிற்பகல் தேனீர் மாத்திரம் பருகுமிடத்து .. .. 0 40

(ii) வாடி வீட்டில் (பிற்பகல் தேனீர் தவிர்ந்த) உணவொன்று உட்கொள்ளப்படுமிடத்து .. 0 60

(இ) 2 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஆனால் 12 மணித்தியாலங்களுக்கு மேற்படாத ஒரு காலப் பகுதிக்கு, ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் அல்லது அதன் பகுதிக்கும் .. .. 0 25

(ஈ) 12 மணித்தியாலங்களுக்கு ஆனால் 24 மணித்தியாலங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதிக்கு .. 3 00

2. வாடி வீட்டில் தங்கியிருந்து அதன் கண்ணுள்ள படுக்கையொன்றை உபயோகிக்கும் ஒவ்வொரு ஆளுக்கும், உணவு கொள்ளுமிடத்து—

(அ) தங்கியிருக்கும் காலம் நான்கு மணித்தியாலங்களுக்கு மேற்படவும் ஆனால் 24 மணித்தியாலங்களுக்கு மேற்படாமலும் இருக்குமிடத்து

(i) 1, 2, 6, 7, 8, 9, ஆகிய இலக்கங்களைக் கொண்ட அறைகளுள் எதனிலும் தங்கியிருக்கும் ஒவ்வொரு ஆளுக்கும் .. .. 7 50

(ii) 3, 4, 5 ஆகிய இலக்கங்களைக் கொண்ட அறைகளுள் எதனிலும் தங்கியிருக்கும் ஒவ்வொரு ஆளுக்கும் .. .. 6 50

(iii) 10 ம் இலக்கங் கொண்ட அறைக்குள் தங்கியிருக்கும் ஒவ்வொரு ஆளுக்கும் .. 10 00

3. வாடி வீட்டில் தங்கியிருந்து அதன் கண்ணுள்ள படுக்கையொன்றை உபயோகிக்கும் ஒவ்வொரு ஆளின் பொருட்டும், உணவுகள் கொள்ளப்படாத விடத்து 1.00 ரூபா கட்டணமாகவும் சேவைக்கட்டணமாக 50 சதமும், அதன் கண்ணுள்ள 2 (அ) ம் விடயத்தின் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களுடன் மேலதிகமாக அறவிடப்படும்.

4. தலைவரின் அனுமதியுடன் வாடி வீட்டின் எப்பாகத்திலேனும் தங்கியிருக்கும் ஒவ்வொரு ஆளுக்கும், ஒரு முழு மாத காலத்திற்கு—

(i) 3, 4, 5 ஆகிய இலங்களைக் கொண்ட அறைகளைப் பொறுத்தவரை .. .. 100 00

(ii) 1, 2, 6, 7, 8, 9 ஆகிய இலங்கங்களைக் கொண்ட அறைகளைப் பொறுத்தவரை .. .. 200 00

(iii) 10 ம் இலக்க அறையைப் பொறுத்தவரை .. 250 00

5. மன்றத்தின் அலுவலர் எவரும் 2 ம் இலக்க அறையை உபயோகித்தற்கு அல்லது அதில் தங்கியிருப்பதற்கு, மாதமொன்றிற்கு .. .. .. 25 00

6. (ஊர்திச்சாலையில் நிறுத்திவைக்கப்படாத) மோட்டார் கார், மோட்டார் சயிக்கிள் ஒவ்வொன்றிற்கும்—

(அ) 6 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலப்பகுதி எதற்கும்— கட்டணமில்லை.

(ஆ) 6 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஆனால் 24 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு .. 0 25

7. (ஊர்திச் சாலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்) மோட்டார் கார், மோட்டார் சயிக்கிள் ஆகிய ஒவ்வொன்றிற்கும்

(அ) 6 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலப்பகுதி எதற்கும் கட்டணமில்லை

(ஆ) 6 மணித்தியாலங்களுக்கு மேற்பட்ட ஆனால் 24 மணித்தியாலங்களுக்கு மேற்படாத காலப்பகுதிக்கு 1 00

(இ) ஒவ்வொரு முழு மாதத்திற்கும் .. 15 00

6–92—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

**கிராமாட்சி மன்றங்களின் கட்டளைச் சட்டம்**

13 ம் பிரிவின் கீழான அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்கக் கிராமாட்சி மன்றங்கள் (திருத்தம்) அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட கிராமாட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 13 (1) ம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு, மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், அன்ரன் அல்பிரட் ஆகிய நான் மன்னார் மாவட்டத்து மாந்தை மேற்குக் கிராமாட்சி மன்றத்தின் 6 ம் வட்டார உறுப்பினர், திரு. செல்லத்துரை துரைராசா, அவருடைய தெரிவின் பின்னர், மன்றத்துக்கு அறிவித்தலின்றி, மன்றத்தின் அடுத்தடுத்த மூன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களுக்குச் செல்லவில்லை என்பதைத் திருப்திகரமாய் அறிந்து மன்னார் மாவட்டத்து, மாந்தை மேற்கு கிராமாட்சி மன்றத்தின் 6 ம் வட்டார உறுப்பினர் திரு. செல்லத்துரை துரைராசா, இவ்வறிவித்தல் அரசாங்க செய்திமடலில் வெளியிடப்படும் திகதியிலிருந்து தனது பதவியைவிட்டு நீங்கியுள்ளாரென்பதை இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

அன்ரன் அல்பிரட்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர், மன்னார்.

உள்ளூராட்சி அலுவலகம், மன்னார்,
1973 ம் ஆண்டு வைகாசி மீ 12 ந் உ.

6–91—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

# துணை விதிகள்

எல். டி.—பி 113/47

**கண்டி மாநகர சபை**

மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

(176 ம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச்சட்டத்தின் 5 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் (252 ம் அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 267, 272 (18) என்னும் பிரிவுகளின் கீழ் கண்டி மாநகரசபையின் விசேட ஆணையாளரினால் ஆக்கப்பட்டு, மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 268 ம் பிரிவின் கீழ் அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்டு, தேசிய அரசுப் பேரவையினால் உறுதிப்படுத்தப்பட்ட துணைவிதிகள்.

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 12 ந் உ.

**துணைவிதிகள்**

1. இத்துணைவிதிகள் 1973 ஆம் ஆண்டின் சினிமாக்களில் புகைப்பிடித்தலைத் தடைசெய்தல் (கண்டி) துணைவிதிகளென எடுத்துக்காட்டப்படலாம்.

2. குறிக்கப்பட்டதொரு காலத்தின்போது சினிமாவின் பார்வையாளர் மண்டபத்தினுள் ஆளெவரும் புகை பிடித்தலாகாது.

3. இரண்டாம் துணைவிதிக்கு முரணாகச் செயலாற்றும் ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ரூபா 50 தைக் கொண்ட குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

4. சினிமா ஒவ்வொன்றினதும் உரிமம் பெற்றவர், சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் குறைந்த பட்சம் மூன்று அங்குல உயரமான தடித்த எழுத்துக்களில் "புகைபிடித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது" என்னும் சொற்களைக் கொண்ட ஒளியூட்டப்பட்ட அறிவித்தல்களை, சினிமா வளவுகளிலும் பார்வையாளர் மண்டபத்தின் உள்ளும் துலாம்பரமான இடங்களில் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

5. குறிப்பிட்ட காலத்தின்போது சினிமா வளவுகளினுள் எவ்வகையினதான புகையிலையையும் விற்றலாலாது அல்லது விற்க அனுமதித்தலாகாது என்பது ஒவ்வொரு சினிமாவினதும் உரிமம் பெற்றவருக்கு வழங்கப்படும் உரிமத்தில் நிபந்தனையொன்றுதல் வேண்டும்.

6. இத்துணைவிதிகளில்—

"சினிமா" என்பது ஒளிப்படம், மாய விளக்குக்கூடு அல்லது இவை போன்ற வேறு கருவிகளின் வாயிலாகப் படங்களை அல்லது கட்புலப்பொருட்களைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைப்பதற்காக பகிரங்க அரங்காட்டுகள் துணைவிதிகளின் கீழ் உரிமம் வழங்கப்பட்டுள்ள ஒரு கட்டிடம் எனப்பொருள்படும்; "குறிக்கப்பட்ட காலம்" என்பது பகிரங்க அரங்காட்டு எதுவும் ஆரம்பமாவதற்கு 30 நிமிடங்களுக்கு முன்னிருந்து ஆரம்பித்து அத்தகைய பகிரங்க அரங்காட்டு முடிவுறும்வரைக்கும் என காலமொன்றெனப் பொருள்படுவதுடன் அத்தகைய பகிரங்க அரங்காட்டு நடைபெறும் எல்லா நேரங்களையும் உள்ளடக்கும்; "புகைபிடித்தல்" என்பது சுருட்டுகள், சிகரெட்டுகள், பீடிகள் ஆகியவற்றின் உருவில் அல்லது சுங்கான் அல்லது ஹுக்காவின் உதவியுடன் ஏதேனும் வேறுவகையில் புகையிலையைப் புகைத்தல் எனப்பொருள்படும்; அத்துடன் "பகிரங்க அரங்காட்டு" என்பது (176 ஆம் அத்தியாயமான) பகிரங்க அரங்காட்டுகள் கட்டளைச்சட்டத்திலுள்ள அதே பொருளையுடையது.

6–76—01.06.73 ந திகதிய வர்த்தமானி இல. 62

---

## திருகோணமலைப்பட்டினம்

நகர சபைகள் கட்டளைச்சட்டம்

(255 ம் அத்தியாயமான) நகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 184 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அக்கட்டளைச்சட்டத்தின் 153, 157 ஆகிய பிரிவுகளின் கீழ் திருகோணமலைப்பட்டினத்து விசேட ஆணையாளரால் ஆக்கப்பட்டதும் அக்கட்டளைச்சட்டத்தின் 154 ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டதுமான துணைவிதி.

ஜீ. பீ. விக்கிரமநாயக்க,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 5 ந உ.

### துணை விதிகள்

1. இதனோடுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களுக்கிணங்கத் தீர்மானிக்கப்படும் கட்டணமொன்று புதிய கட்டடங்களுக்காக அல்லது தற்போதுள்ள கட்டடங்களில் மாற்றங்கள் செய்வதற்காக (268 ம் அத்தியாயமான) வீடமைப்பு, நகரச் சீர்திருத்தக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் சமர்ப்பிக்கப்படும் வரைவுப்படங்களைப் பரிசோதனை செய்து பரிசீலனை செய்வது சம்பந்தமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

2. (i) துணைவிதி 1 இன் கீழ்ச் செலுத்தப்படற்பாலதான கட்டணத் தொகை திருகோணமலைப் பட்டினத்து விசேட ஆணையாளரிடமிருந்து கோரிக்கையொன்று கிடைப்பெற்ற திகதியிலிருந்து ஏழு நாட்களுக்குள், அங்கீகாரத்திற்காக அல்லது சம்மதத்திற்காக விண்ணப்பம் செய்யும் நபரினால் செலுத்தப்படல் வேண்டும்.

(ii) இத்துணைவிதியின் முற்போந்த பந்தியில் விதிக்கப்பட்டுள்ள காலத்துக்குள் அத்தகைய கட்டணத்தைச் செலுத்தத் தவறும் ஒவ்வொருவரும் ஒரு தவறைப் புரிந்தவராவதுடன் குற்றத்தீர்ப்பின் பேரில் நூறு ரூபாவுக்கு மேற்படாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

3. 1 ஆம் துணைவிதியில் குறிக்கப்பட்டுள்ள கட்டணம் செலுத்தப்படும் வரை வரைவுப்படம் எதுவும் பரிசோதிக்கப்பட்டுப் பரிசீலனை செய்யப்படலாகாது.

### அட்டவணை

1. புதிய கட்டடங்களுக்கான அல்லது மேலதிக நிலப்பரப்பு சம்பந்தப்பட்ட தற்போதுள்ள கட்டடங்களில் உள்ள மாற்றங்களுக்கான வரைவுப்படங்கள்.

| | ரூபா | ச. |
|---|---|---|
| (அ) மொத்த நிலப்பரப்பு 600 சதுர அடிக்கு மேற்படாத விடத்து .. .. | கட்டணமில்லை | |
| (ஆ) மொத்த நிலப்பரப்பு 600 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 1,000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 10.00 | |
| (இ) மொத்த நிலப்பரப்பு 1,000 சதுர அடிக்கு மேற்பட்டு ஆனால் 3,000 சதுர அடிக்கு மேற்படாதவிடத்து .. | 25 | 00 |
| (ஈ) மேலதிக ஒவ்வொரு 1,000 சதுர அடிக்கு அல்லது அதன் பாகத்திற்கு .. .. | 25 | 00 |
| 2. மேலதிக நிலப்பரப்பு சம்பந்தப்பட்ட தற்போதுள்ள கட்டடங்களில் மாற்றங்கள் செய்வதற்கான வரைவுப் படங்களுக்கு தற்போதுள்ள நிலப்பரப்பு 600 சதுர அடிக்கு மேற்படுமிடத்து .. .. .. | 10 | 00 |
| 3. புதிய வரைவுப்படங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படாமல் அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பம் ஒன்றின் விடயத்தில் .. .. .. | 10 | 00 |

இந்த அட்டவணையில் "நிலப்பரப்பு" என்பது கீழ்த்தளத்தில் அல்லது வேறெந்த மாடியிலுள்ள இடம் எனப்பொருள்படும்.

6–93—01.06.73 ந திகதிய வர்த்தமானி இல. 62

---

எல். டி.—பி. 15/65.

## தெஹியோவிற்றைப் பட்டின சபை

பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் தெஹியோவிற்றைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

பீ. சிறிவர்த்தன,
மேலதிக செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1972 ம் ஆண்டு டிசெம்பர் மீ 26 ந உ.

### துணைவிதிகள்

1. சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளவையும் 1965 யூலை 9 ந் தேதிய 14,444 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டவையுமான நியமத்துணைவிதிகளின் XIX ஆம் பாகத்தின் 6 ஆம் துணைவிதியின் நோக்கங்களுக்காக 1973 சனவரி 1 ந் தேதி முதல் மலமகற்றப்படும் ஒவ்வொரு மலகூட வாளிக்கும் மாதமொன்றுக்கு மூன்று ரூபா மலகூடக் கட்டணமாக விதிக்கப்படுகின்றது.

2. 1966 ஏப்பிறில் 1 ஆந் தேதிய 14,689 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்டு, 1967 ஏப்பிறில் 28 ஆந் தேதிய 14,746 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட துணைவிதியால் திருத்தப்பட்டவாறான மலகூடக் கட்டணங்கள் தொடர்பான துணைவிதியானது, 1973 சனவரி 1 ஆந் தேதியிலிருந்து இத்தால் இலதாக்கப்படுகின்றது.

6–160—01.06.73 ந திகதிய வர்த்தமானி இல. 62

### அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

**1.12.1968 தொடக்கம் அமுலுக்கு வந்தது**

## "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

### வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர் அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், கால தாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறேக்ராறுல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய ... ... ... | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் ... ... ... | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் | |
|---|---|---|---|---|
| | ரூ. | ச. | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் ... ... ... | 46 | 0 | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு ... ... ... | 36 | 0 | 42 | 0 |
| முதற பகுதியின் இரு பிரிவுகள் ... ... | 43 | 50 | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | ரூ. | ச. | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | 0 | 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம். கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

முக்கிய கவனிப்பு.—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| மே | .. | 4.5.73 | வெள்ளி | .. | 27. 4.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| | | 11.5.73 | வெள்ளி | .. | 4. 5.73 | வெள்ளி | | ந. ப. | 12.00 |
| | | 18.5.73 | வெள்ளி | .. | 11. 5.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| | | 25.5.73 | வெள்ளி | .. | 18. 5.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| யூன் | .. | 1.6.73 | வெள்ளி | .. | 25. 5.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| | | 8.6.73 | வெள்ளி | .. | 1. 6.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| | | 14.6.73 | வியாழன் | | 8. 6.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |
| | | 22.6.73 | வெள்ளி | .. | 14. 6.73 | வியாழன் | .. | ந. ப. | 12.00 |
| | | 29.6.73 | வெள்ளி | .. | 22. 6.73 | வெள்ளி | .. | ந. ப. | 12.00 |

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஒகத்து மீ 18 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.